## 61

# தியாகி

“வணக்கம்” என்று கூறியவாறு தன் முன் வந்து நின்றவரைப் பார்த்தார், அந்த இளம் அதிகாரி.

“உட்காருங்கள்” என்று கூறிவிட்டு, வந்தவரைக் கவனித்தார் அவர்.

வந்தவர் உட்கார்ந்தார். அந்த அலுவலக வரவேற்பறையில் அவர் நீண்ட நேரம் காத்திருந்த களைப்பு அவர் முகத்தில் இருந்தது. தடித்த மோட்டாக் கதர் ஜிப்பா அணிந்திருந்தார். பழுப்புக் காகிதம் மாதிரி வெளுத்திருந்தது அவர் தலை முடி. சுக்கு மாதிரி உலர்ந்த உடம்பு. உணர்ச்சி வயப்பட்டவராய் முகம் சிவந்தும், கைகள் நடுங்கவும் அமர்ந்திருந்தார் அவர்.

“சொல்லுங்கள்... என்ன விஷயம்?” என்றார் அதிகாரி.

“என் பெயர் சிவபாத சுந்தரம்” என்றார் பெரியவர்.

“உம்... தியாகி பென்ஷன் சம்பந்தமா வந்திருக்கீங்களா...?” சலிப்போடு கேட்டார் இளைஞர். காலை முதல் மாலை வரை கசங்கிப் போன கதர்ச் சட்டைக்காரர்களோடு மல்லாடியதால் ஏற்பட்ட நிரந்தரச் சலிப்பு.

“தியாகி பென்ஷன் சம்பந்தமாத்தான் வந்திருக்கேன். ஆனா, புதுசா விண்ணப்பிக்கிறதுக்காக இல்லை. இப்போது நான் தியாகி பென்ஷன் வாங்கிக்கொண்டுதான் இருக்கிறேன். அந்தப் பென்ஷனை அடுத்த மாசத்திலிருந்து நிறுத்திக் கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொள்ளத்தான் வந்திருக்கிறேன்” என்றார் பெரியவர். துண்டால் முகத்தைத் துடைத்துக் கொண்டார்.

“என்ன... வாங்குகிற பணத்தை நிறுத்தச் சொல்லுகிறீரா?” அதிகாரியின் முகத்தில் ஆச்சரியம் வெளிப்படையாகவே தெரிந்தது.

கூடவே எதிரில் இருந்த மனிதரைக் குறித்துச் சந்தேகமும் ஏற்பட்டது. ஒன்று அவர் பைத்தியமாகவோ, அல்லது அசடாகவோ தான் இருக்க வேண்டும். இல்லாமல், எவன் பணத்தை வேண்டாம் என்பான், இந்த நாளில்?

"கொஞ்சம் தண்ணீர் கிடைக்குமா?... ரொம்ப தூரத்திலிருந்து வந்திருக்கிறேன் தங்களைப் பார்க்க, வரவேற்பறையிலேயே மூன்றரை மணி நேரம் காத்திருந்தேன். தாகமாய் இருக்கிறது..." என்றார் அந்தப் பெரியவர். மேலே, மின் விசிறி இருந்தாலும், அவருக்கு வியர்த்துக் கொட்டியது. அடிக்கடி துண்டால் முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டார் அவர்.

அதிகாரி ஒரு பித்தானை அழுத்தினார். எட்டிப் பார்த்த காக்கி யூனிபார்ம் ஏவலரிடம் தண்ணீர் கொண்டு வரச் சொன்னார். தண்ணீர் வந்தது. ஏவலரிடமிருந்து கனமான, மூக்கை எரிக்கிற பீடி வாசனையும் சேர்ந்து வந்தது. முகத்தைச் சுளித்துக் கொண்டார் அதிகாரி.

பெரியவர் தண்ணீரை மடக் மடக்கென்று அவசரமாய்க் குடித்தார். அவர் உடம்பில் களைப்பு நீங்கிச் சற்றே தெம்பு வந்திருக்க வேண்டும். முகத்தில் லேசான மகிழ்ச்சி தோன்றியது அவருக்கு. அந்தக் கிளர்ச்சியின் காரணமாக, "நம்மூர் முத்திரைப் பாளையத்துத் தண்ணீர் மாதிரி எந்த ஊரிலேயும் நான் சாப்பிட்டது இல்லைங்க... என்ன ருசி... என்ன சுத்தம்..." என்றார்.

"ப்ச்" என்று முனகிக் கொண்டார் அதிகாரி. பெரியவரின் பேச்சு அவருக்கு ருசிக்கவில்லை. காரணம், அவர் உள்ளூர்க்காரர் இல்லை. வெளி மாநிலத்துக்காரர். தவிரவும், ஓர் அதிகாரியிடம், இப்படியான உப்புச் சப்பற்ற விவரங்களையெல்லாம் ஒருவர் பேசுவதா என்ன?

"பென்ஷன் பணம் வேண்டாம் என்று நீங்கள் சுலபமாகச் சொல்லிவிடலாம். ஏன் வேண்டாம் என்று நீங்கள் காரணம் சொல்லவேண்டும்" என்றார் அதிகாரி. அவருக்கு அளிக்கப் பட்டி ருந்த சட்டப்புத்தகத்தில் அப்படி எழுதப்பட்டிருந்தது.

"ஒரு கட்டத்தில் எனக்குப் பணம் தேவைப்பட்டது ஐயா. மூத்த மகன் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தான் ஒரு மகன் பள்ளிக் கூடத்தில் படித்துக் கொண்டிருந்தான். இருவருக்கும் ஆன படிப்புச் செலவும் வாழ்க்கைத் தேவையும் என்னால் பெற முடியாதவையாய் இருந்தன.

ஒருவன், பணத்தை நான்கு வழிகளில் பெறலாம் ஐயா. ஒன்று, உழைத்துச் சம்பாதிப்பது. என்னால் உழைக்க முடியாது. வயது முதுமை காரணமாக வேலை செய்யும் திறனை இழந்துவிட்டேன். இரண்டு, திருடலாம். நான் காந்தியவாதி திருடமாட்டேன். மூன்று, கடன் பெறலாம். கடனைத் திருப்பித் தருதல் என்னால் முடியாதது. நான்காவது வழி, தானம் பெறுதல். ஆகவே, பென்ஷனைத் தானமாக நினைத்துப் பெற்றேன். என் பிள்ளை படிப்பை நன்கு முடித்தான். வேலையிலும் அமர்ந்துவிட்டான். என் வாழ்க்கை இனி அவனைச் சார்ந்தது. எனக்கு ஒருபிடி சோறு இனி கிடைக்கும். ஆகவே, தானமாக வரும் பென்ஷன் பணம் இனி எனக்குத் தேவையில்லை. உயிரைக் கட்டிப் பிடித்து வைத்துக்கொள்ள மட்டுமே பிச்சை ஏற்கலாம். அதைச் சாஸ்திரம் அனுமதிக்கிறது. இதற்குமேல் பையில் பணமிருக்கப் பிச்சை எடுப்பவன் சண்டாளன். ஆகவே வரும் மாதம் தொட்டு எனக்குத் தரும் பென்ஷனை நிறுத்திவிடுங்கள்."

இளம் அதிகாரிக்கு எதனாலோ, பெரியவர்பால் ஓர் ஈர்ப்பு ஏற்பட்டு விட்டது.

"நீங்கள் என்ன தொழில் செய்தீர்கள். அதாவது சுதந்திரப் போராட்ட வீரராக ஆவதற்கு முன்பு...?" என்றார் அந்த அதிகாரி. ஒரு பென்சிலை எடுத்துப் பேப்பரில் கிறுக்கியபடி. ஏதோ எழுத வேண்டும் என்கிற முனைப்பு அவருக்கு ஏற்பட்டிருக்க வேண்டும். ஏதோ கிறுக்க நினைத்தவர், தன் பெயரையே திரும்பத் திரும்ப எழுதிக் கொண்டிருந்தார்.

"இளமையில், இரும்புக் கழிவுப் பொருள்களைக் கப்பலில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து கொண்டிருந்தேன். இலட்சம் இலட்சமாகப் பணம் வந்து கொண்டிருந்தது. ஒருநாள் மகாத்மாவின் பேச்சைக் கேட்டேன். அவர் எழுதியவற்றைப் படித்தேன். வாழ்க்கை யையே இன்னும் வாழத் தொடங்காத இளைஞன் ஒருவன் கொடி யைப் பிடித்த பிடியை விடாது லத்தி அடிபட்டுச் செத்ததை அறிந்தேன். கொடுமைக்கார வெள்ளையன் ஒருவனைச் சுட்டுத் தானும் சுட்டுக்கொண்டு மாய்ந்த வீரன் ஒருவனின் வரலாற்றைக் கேட்டேன். அந்த நாட்களில் அரவிந்தரைத் தினம் தினம் கண்டு பேசும் பாக்யம் எனக்கு வாய்த்தது. என் பணம், என் வாழ்க்கை, என் சௌகர்யம் எல்லாமும் எனக்கு மிக அற்பமாகப்பட்டது. முதுகெலும்பில்லாத புழுவுக்கும் கடையனாய் நான் வாழ்ந்து கொண்டிருப்பதை உணர்ந்தேன். என் தொழிலை விட்டொழித்தேன். இருப்பதையெல்லாம் தேவைப்பட்டோர்க்கு எடுத்துக் கொடுத்து

விட்டேன்... பணத்தை எல்லாம் இழந்தேன். ஆம் இழந்த பின்தான் தெரிந்தது நான் எவ்வளவு பெரிய ஆத்மலாபத்தைச் சம்பாதித்துக் கொண்டேன் என்று..."

பெரியவரின் முகம், விளக்கேற்றியது மாதிரி பிரகாசித்தது, அவர் தொடர்ந்தார்.

"ஏதேனும் ஒன்றைப் பெற நினைத்தீர்களானால் ஏதேனும் ஒன்றை நீங்கள் இழக்கத்தான் வேண்டும். ஒவ்வொன்றுக்கும் ஒரு விலையை நீங்கள் கொடுத்துத்தான் தீர வேண்டும்."

பெரியவர் சிரித்தார். லாட்டரியில் பரிசு பெற்றவரின் சிரிப்பு மாதிரி இருந்தது அந்தச் சிரிப்பு.

"வியாபாரத்தை ஒரு பக்கம் நடத்தியபடியே, அரசியலிலும் நீங்கள் ஈடுபட்டிருக்கலாமே..." என்றார் அதிகாரி. அவர் குரலில் உண்மையான அக்கறை இருந்தது.

பெரியவர் இதைக் கேட்டுச் சிரித்தார். விழாத, கெட்டியான பல்வரிசை அவருக்கு. ஒரு குழந்தையைப் பார்ப்பதைப் போன்ற வாஞ்சையோடு அவரைப் பார்த்தார். பிறகு சொன்னார்:

"நீங்கள் இளைஞர். இந்தக் காலத்தவர். நிகழ்கால அரசியலும், அரசியல்வாதிகளும் உங்களை இப்படிச் சொல்ல வைத்திருக்கிறார்கள். நீங்கள் தவறு செய்யவில்லை; நாங்கள் தாம் தவறு செய்தவர்கள். எங்கள் காலத்து அரசியல் வேறு. அரசியலுக்கு எங்கள் அர்த்தம் வேறு. அரசியல் என்றால் ஆட்சி மாற்றம் என்பதையே குறியாய் வைத்து இன்றைய அரசியல் இயங்குகிறது. எங்களுக்கும் ஆட்சி, அதிகார மாற்றம் நோக்கமாய்த்தான் இருந்தது. ஆனால் அது பத்தாவது நோக்கம். எங்களைப் பூரணப்படுத்திக் கொள்வதையும், பொது மக்களை மனத்தளவில் முழுமைப்படுத்துவதையுமே நாங்கள் முதலான அரசியல் பணியாக நினைத்தோம். அரசியலை ஒரு புனிதமான கைங்கர்யமாக, சேவையாக, தொண்டாக நாங்கள் நினைத்தோம். ஒரு நாளில் இருபத்து நான்கு மணி நேரத்தையும் தேசச் சேவைக்காக அர்ப்பணித்து விட்டோம். தேசச் சேவைக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொள்கிற தொண்டனுக்கு வேறு எதிலும் நாட்டம் இருக்க முடியாது. ஒரு மனிதன் இரண்டு மனைவிகளோடு ஏக காலத்தில் இல்லறம் நடத்துவது எவ்வளவு இழிவோ, நீசத்தனமோ, அந்த அளவினும் இழியது, ஓர் அரசியல்வாதி வியாபாரியாக இருப்பதும் என்று நாங்கள் நினைத்தோம்..."

அதிகாரி தலையை அசைத்துப் பெரியவர் சொல்வதை ஏற்றுக் கொள்கிற பாவனையைக் காட்டினார்.

"போராட்டங்களில் ஈடுபட்டு எத்தனை நாட்கள் சிறையில் இருந்தீர்கள்...?"

பெரியவர் கொஞ்சம் யோசித்தார். பிறகு சொன்னார்:

"கள்ளுக்கடை மறியலில் ஒரு ஒன்னரை ஆண்டு கிடைத்தது. என் மாமாதான் கள்ளுக்கடை உரிமையாளர். அவர் கடைக்கு முன் மறியல் செய்தேன். மாமாதான் என்னை வளர்த்தவர். அவர் போட்ட சோற்றை உண்டு வளர்ந்தவன் நான். ஆனாலும், தனிமனித உறவு என்னைக் குறுக்கிட நான் அனுமதிக்கவில்லை. தத்துவமே எனக்கு வழிகாட்டியது. உறவை இழக்க வேண்டியதாயிற்று. அப்புறம், அந்நியத்துணி பகிஷ்காரம், அதற்கு ஒரு ஆறுமாதம். ஒரு வெள்ளைக் காரனைக் கொல்ல முயன்றதாகச் சதிவழக்கு. இரண்டு வருஷங்கள் அந்தமானில் இருந்தேன். அந்தமானில் இருந்தபோதுதான் என் தாய் நானறியாமலே மகாத்மாவுக்குக் கடிதம் எழுதினாள். தள்ளாத வயதில் எனக்கு ஒரு திருமணத்தைச் செய்து பார்க்க ஆசைப்படுவதா கவும், அதற்கு அவர் அனுமதி வழங்க வேண்டும் என்றும் எழுதி யிருக்கிறார்.

நான் சிறையை விட்டு வெளியே வந்ததை அறிந்ததும் மகாத்மாவே எனக்கு ஒரு கடிதம் எழுதினார். தாய் நாட்டுக்கும் தாய்க்கும் வித்தியாசம் இல்லை. தாய் நாட்டின் கட்டளைகளை யெல்லாம் ஏற்றுக்கொள்கிற நீ, தாயின் கட்டளையையும் ஏற்றுக் கொள்ளவேண்டும். ஒரு மகன் என்னும் முறையில் அது உன் கடமை என்று மகாத்மாவே அவர் கைப்பட எனக்கு எழுதியிருந்தார்!..."

பெரியவர் உணர்ச்சி வசப்பட்டவராய், தலையைக் குனிந்து கொண்டார். துண்டால் முகத்தைத் துடைத்துக் கொண்டார்.

"மன்னிக்க வேண்டும். கொஞ்சம் உணர்ச்சிவசப்பட்டு விட்டேன். தலைவரே சொல்லிவிட்டதால், அம்மாவின் ஆசையைப் பூர்த்தி செய்தேன். அம்மா நிம்மதியாகக் கண்ணை மூடினார்..."

அதிகாரி பென்சிலைக் கீழே வைத்துவிட்டுக் கைகளைக் கட்டிக் கொண்டு கேட்டுக் கொண்டிருந்தார். பிறகு மென்மையான குரலில் சொன்னார்.

"சுதந்திரம் கிடைத்த பிறகு, ஆட்சிக்கு வந்தவர்கள், உங்களுக்கு உதவவில்லையா...?"

"ஏன் உதவ வேண்டும்? நான் கூலிக்காரன் அல்லவே? செய்த வேலைக்காகப் பணம் பெறுவது எவ்வாறு தொண்டாகும்? நான் என் பிறந்த நாட்டுக்காக என்னால் ஆனதைச் செய்தேன். அதற்குச் சம்பளம் பெற விரும்பவில்லை. அப்புறம் நான் சிரம ஜீவனம் தான் செய்தேன். இருக்கிற சொத்துக்களை விற்றுச் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். அமைச்சர்கள் எல்லாம் என் நண்பர்கள்தான். கடலூர் சிறையிலும், கண்ணனூர் சிறையிலும் என்னோடு இருந்தவர்கள் தான். ஒரு கட்சிக் கூட்டத்தின்போது என்னைப் பார்த்துவிட்ட சுப்ரமண்யம் சொன்னார் — அப்போது அவர் போக்குவரத்துத் துறை அமைச்சர். "என்ன சிவபாத சுந்தரம்; கஷ்டப்படுகிறீர்களாமே, நீங்கள் எல்லாம் சிரமப்படக் கூடாது. சென்னை—பாண்டிச்சேரி வழி லைசென்ஸ் தருகிறேன். நல்ல 'ரூட்'. அதுலே பஸ் விட்டால் சௌகர்யமாக இருக்கலாம்" என்றெல்லாம் சொன்னார். நான் மறுத்துவிட்டேன். செய்த சேவைக்காகப் பரிசு பெறுவது, என்ன தர்மத்தில் சேர்த்தி...?"

பெரியவர் தலை கவிழ்த்து இருந்தார். சில நிமிடங்களுக்குப் பிறகு தலைநிமிர்ந்தார். அவர் முகத்தில் கவலையும், அவமானப் படுத்தப்பட்ட உணர்வும் இருந்தது. பிறகு தொடர்ந்தார்.

"பொன் மாதிரியான ரூட் ஐயா அது. அதை மறுக்கிற மனத் திடம் பெற்ற நான், பல வருஷங்களுக்குப் பிறகு, தியாகி பென்ஷனுக்காக விண்ணப்பம் போடவும் நேர்ந்துவிட்டது. வெட்கத்தாலும், அவமானத்தாலும் கூசிப் போனேன். என் மனைவி என்னைப் புரிந்துகொண்டவர். என்னைத் திருமணம் செய்து கொண்ட பாவத்துக்காகக் காலம் முழுக்க, மனசுக்குள்ளேயே கண்ணீர் விட்டவர். நான் சிறைக்குப் போகிற போதெல்லாம், எப்படி அவர் சாப்பிட்டுக் குழந்தைகளையும் போஷித்தார் என்பதெல்லாம் ஒரு பெரிய கதை. என்னைப் போய் தியாகி என்கிறார்கள். தியாகிகளின் மனைவிமார்களே பெரிய தியாகிகள். ஒரு கூலி விவசாயப் பெண்ணாக, வீட்டு வேலைக்காரியாக எல்லாம் அவர் இருந்து எங்களை வளர்த்தார். அந்தப் பெண்மணி படும் அவஸ்தையும் துயரும் பொறுக்க முடியாமல்தான் அவள் கஷ்டத்தைக் குறைக்கலாமே என்றுதான் தியாகி பென்ஷனுக்கு விண்ணப்பம் பண்ணினேன். இப்போ, பிள்ளை சம்பாதிக்கத் தொடங்கிவிட்டான். என் மனைவியும் இப்போ இல்லை. நான் ஒண்டிக் கட்டைதானே? இனி எனக்குப் பென்ஷன் தேவை இல்லை. தயவு பண்ணி, என் பென்ஷன் பணத்தைத் நிறுத்திவிடுங்கள்.

அதிகாரி யோசித்தார்: விதிமுறை இருக்கிறதா என்று எதையோ புரட்டினார். 'உங்களைப் போன்றவர்களால் தான் இன்னும் மழை பெய்கிறது' என்றார். பிறகு, பெரியவரிடம் கையெழுத்து பெற்றுக் கொண்டார். பெரியவர் புறப்படும் போது, எழுந்து நின்று அவருக்கு வணக்கம் சொல்லி, வாசல் வரை சென்று வழியனுப்பி வைத்தார்.

காந்தி இலைக்கு முன் அமர்ந்தான்.

"சீக்கிரம் சோத்தைப்போடு, ஆபீசுக்கு டைம் ஆயிட்டுது..." என்று பரபரத்தான்.

அவசரம் அவசரமாக அவன் மனைவி சோறு பரிமாறினாள். அவன் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது அவள் சொன்னாள்.

"இந்த மனுஷருக்கு ஏனிந்த அவசர புத்தி? இப்பத்தான் வேலைக்கு போயிருக்கீங்க... இப்பத்தான் மூணு வேளை நிம்மதியா சாப்பிட ஆரம்பிச்சிருக்கோம்... அதற்குள்ளே எனக்குப் பென்ஷன் பணம் வேணாம்னு சொல்ல போயிருக்காரு... நாம என்ன லட்சம் லட்சமாவா சம்பாதிக்கிறோம்... அந்தப் பணம் வந்தா எவ்வளவு சௌகர்யமாக இருக்கும்?"

காந்தி தலையசைத்தான்.

"கிழடுக்கு யார் சொல்றது? அது பிடிச்சதுக்கு மூணுகால்னு சொல்ற ஜாதியாச்சே. சும்மா திண்ணையில் உக்காந்து தெண்டச் சோறு தின்னுக்கிட்டு, என் கழுத்தை அறுக்கப் போறது... என்ன பண்ணித் தொலையறது? ம்... மோர் இல்லியா... சீக்கிரம் ஊத்துடி..." என்றான் காந்தி.

1986